

மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ள மின்சார பேருந்தின் மாதிரி பேருந்தை எண்ணூரில் அமைந்துள்ள ஸ்விட்ச் மொபிலிட்டி நிறுவனத்தில் பார்வையிட்டு அமைச்சர் சா.கி.சிவசங்கர் ஆய்வு செய்தார். உடன் மேலாண் இயக்குனர் த.பிரபுசங்கர், அசோக் லேலண்ட் நிறுவன அதிகாரி, துறை அதிகாரிகள் உடன் சென்றனர்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் புனித ரமலான் விழாவை முன்னிட்டு டான்பாஸ்கோ பள்ளி வளாகத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இப்தார் புனித ரமலான் நோன்பு திறந்து 3000 இஸ்லாமிய பெருமக்களுக்கு நல உதவிகளை வழங்கி சிறப்பித்தார். இதில் தலைவர் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கே.எம். காதர் முகைதீன், மனித நேய மக்கள் கட்சி எம்.எச். ஜவாஹிருல்லா, ஓய்வு பெற்ற நீதிபதி அக்பர் அலி, இந்திய தேசிய லீக் பசீர் அகமது உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# பாபநாசம் தொகுதி ராஜகிரியிலுள்ள நூலகத்திற்குக் கட்டிடம் கட்டித் தரப்படும்!

## பேரவையில் எம்.எச். ஜவாஹிருல்லாவின் கேள்விக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதில்!



சென்னை, மார்ச் 28-

"பாபநாசம் தொகுதி ராஜகிரியிலுள்ள கிளை நூலகத்திற்கு நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாற்று இடத்தில் கட்டடம் கட்டித்தரப்படும்" என்று அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று சட்டப்பேரவையில் பாபநாசம் தொகுதி உறுப்பினர் எம்.எச். ஜவாஹிருல்லாவின் கேள்விக்கு பதிலளிக்கும்போது கூறினார்.

சட்டப்பேரவையில் நேற்று இது குறித்து எம்.எச். ஜவாஹிருல்லா எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அளித்த பதில் வருமாறு:-

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்களது அனுமதியோடு, 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வை நிறைவு செய்திருக்கின்ற மாணவச் செல்வங்களுக்கும், நாளைய 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வை எழுதவிருக்கின்ற மாணவச் செல்வங்களுக்கும் நம் அனைவருடைய வாழ்த்துக்களும் உரித்தாகட்டும் என்று சொல்லி, தற்போது பதில் அளிக்கிறேன்.

புதிய நூலக கட்டடம் கட்ட 2025—2026-ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாற்று இடத்தில் கட்டடம் கட்டப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** ராஜகிரியில் உள்ள நூலகம் அரை நூற்றாண்டு களுக்கு மேலாக செயல்பட்டு வருகிறது. அந்த ஊரிலே 9,460 மக்கள் வசித்து வருகிறார்கள். ஏராளமான பள்ளிக்கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. புதிய கட்டடம், புதிய இடத்தில் கட்டித் தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு நன்றி தெரிவிக்கின்றேன். அதேநேரத்தில், பாபநாசம் பேரூராட்சியில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தற்போது நூலகம் இயங்கி வருகிறது. நான், முதலமைச்சர் அவர்களுக்கு வைத்த கோரிக்கையின் அடிப்படையில், பாபநாசத்தில் அரசு புறம்போக்கு நத்தம் வகைப்பாடுடைய நிலத்தினை வழங்க மாவட்ட ஆட்சியர் அவர்களுக்குக் கோரப்பட்டிருக்கிறது என்று பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். உடனடியாக இந்த காலிமனையைப் பெற்று இந்த நிதியாண்டிலேயே அந்த நூலகம் அமைப்பதற்கு அமைச்சர் முன்வருவார்களா?

கணபதி அக்ரஹாரத்தில் உள்ள நூலகமும் பழுதடைந்த இடத்தில் இருக்கின்றது. அந்த ஊரக நூலகத்தைத் தரமுயர்த்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை முன் வைத்தேன். கொரோனா காலத்தில் பணியாளர்களை நியமிப்பதற்கான தடை உத்தரவு இருப்பதன் காரணமாக இந்தக் கோரிக்கை ஏற்க முடியாது என்று துறைச் செயலாளர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்.

இதை மறுபரிசீலனை செய்து, கணபதி அக்ரஹாரத்திலும், அதேபோல பாபநாசத்திலும் புதிய இடத்தில் நூலகம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** ஏற்கெனவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் கேட்ட மாற்று இடம் அது இன்றைக்கு processingல் இருக்கிறது. மிக விரைவாக அது கட்டி முடிக்கப்படும். அதுமட்டுமல்லாமல், பள்ளிக்கூடத்தில் இருக்கின்ற நூலகங்களுக்கான ஒரு புதிய நூலகம் கட்டித் தர வேண்டும். அதேபோன்று பாழடைந்திருக்கின்ற நூலகங்களுக்கு ஒரு புதிய நூலக கட்டடமும் கட்டித் தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே, பாபநாசம் தொகுதியைப் பொறுத்தவரை கிளை நூலகங்கள் என்று 6 நூலகங்கள் இருக்கின்றன. ஊர்ப்புற நூலகங்கள் என்று கிட்டத்தட்ட 6 நூலகங்கள் இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதுமட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாக இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் கிட்டத்தட்ட 821 நூலகங்கள் கட்டுகின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டும் 29 மைய நூலகங்கள், 68 முழு நேரக் கிளை நூலகங்கள் என்று கிட்டத்தட்ட 27.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கின்ற பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதிலே நீங்கள் கேள்வியின்மூலமாக கேட்டிருக்கக்கூடிய அந்த நூலகத்திற்கும் கட்டித் தருவதற்கான ஏற்பாட்டை துறை சார்ந்த கருத்துரு பெறப்பட்டு, கண்டிப்பாக செய்து தரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** ஒருங்கிணைந்த கல்வி அதாவது, Samagra Shiksha Abhiyaan திட்டத்தின்கீழ் பள்ளி நூலகங்களுக்கு நூல்களைக் கொள்முதல் செய்வதற்கு வழிகாட்டு நெறிமுறைகள் இருக்கின்றனவா, புத்தகக் கொள்முதல் பட்டியலை முன்கூட்டியே onlineல் வெளியிட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** SSA மூலமாக நாங்கள் புத்தங்களைக் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம். நாம் ஓரளவு செய்து கொண்டிருக்கிறோம். தற்போது முதலமைச்சர் அவர்கள் வெளிப்படைத்தன்மையாக அந்தக் கொள்முதல் இருக்க வேண்டும் என்ற விதத்தில் தற்போது online மூலமாகவும் நாங்கள் அதைச் செய்து கொண்டிருக்கின்றோம். வருங்காலத்தில் உங்களுக்கு எத்தனைப் புத்தகங்கள் தேவைப்படுகின்றதோ, அதுசார்ந்து உங்களுடைய கோரிக்கையை வைக்கும் போது அதைக் கொள்முதல் செய்து, அந்த நூலகத்திற்கு நம்மால் வழங்க முடியும். அதே போன்று நம்முடைய பண்ருட்டி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே, என்னிடம் வைத்திருந்த ஒரு கோரிக்கை என்பது புலியூர் என்கிற பகுதியில் ஒரு நூலகம் தேவை. அதை மாற்று இடத்தில் கட்டிவிட்டார்கள். ஆனால், எங்களுடைய இடத்திற்கு அது தேவை. அது மக்களுடைய கோரிக்கையாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அதையும் நம்முடைய துறையின் அதிகாரிகளிம் கருத்துரு பெறப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கையும் கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறினார்.

### கொளத்தூர் தொகுதியில் புனித ரமலான் பெருநாளை முன்னிட்டு

# இஸ்லாமிய பெருமக்களுக்கு பரிசுகள் - முதல்வர் வழங்குகிறார்!

## அமைச்சர் – மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு

சென்னை, மார்ச் 28 - சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் தொகுதியில் "ஒருவருக்கொருவர் நலம் செய்வோம் உள்ளத்து அன்பால் ஒளி செய்வோம்" எனும் அடிப்படையில் நாளை 29-3-25 சனிக்கிழமை மாலை 5.00 மணி அளவில் சென்னை, பெரம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் புனித ரமலான் பெருநாளை முன்னிட்டு கொளத்தூர் தொகுதி இஸ்லாமிய பெருமக்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரமலான் வாழ்த்துக்கள் தெரிவித்து பரிசு பொருட்கள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

இவ்விழாவில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், முன்னாள் அமைச்சர், விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி கே .எஸ்.மஸ்தான், மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள், ஜாமிஆ ஷம்ஸிய்யா டாக்டர் உஸ்தாத் எம்.சம்சுதீன். டாக்டர் உஸ்தாத். எம் சம்சுதீன், பெரம்பூர் டான் பாஸ்கோ பள்ளி ரெக்டார் மற்றும் தாளாளர் அருட் தந்தை மரிய ஆரோக்கியம் கனகா, ஸ்ரீ ஜெயின் மகா சங்க தலைவர் பியாரிலால் ஜெயின்,

மாங்காடு காமாட்சி அம்மன் கோவில் அர்ச்சகர் எஸ்.ரவி குருக்கள், பாரதி இராசேந்திரன் சோர்டியா. பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழக தலைவர் துறைமுகம் காஜா. சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

மேலும் இந்த புனித ரமலான் நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி, ப.தாயகம்கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், ப.ரங்கநாதன், இரா.விடுதலை, பகுதிச் செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் மற்றும் கே.சந்துரு, சி.மகேஷ்குமார். தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக் எஸ். தனசேகர். அசோக்குமார், மாமன்ற உறுப்பினர்கள்: சி.ஸ்ரீதணி, என்.தாவூத் பீ.டி.யோகப்பிரியா, பி.அமுதா, பா.அன்பரசு ஆகியோர் சிறப்பிக்கி ன்றனர்.

# காசநோய் கண்டறிய துல்லியமான கருவிகள்!

## சட்டப்பேரவையில் உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்



சென்னை, மார்ச் 28 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.03.2025) சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது கீழ்க்கண்டவாறு பதிலளித்தார்.

லால்குடி சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதில் வருமாறு:

திருச்சி மாவட்டம், லால்குடி ஊராட்சி ஒன்றியத்தில் புதூர் உத்தமனூரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இவ்வளாகத்தில் ஏற்கெனவே ரூ.33 இலட்சம் செலவில் செவிலியர் குடியிருப்பு ஒன்று கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. தற்போது ரூ.1.35 கோடி செலவில் கூடுதல் கட்டிடங்களும், ரூ.50 இலட்சம் செலவில் வட்டார பொது சுகாதாரக் கட்டிடம் கட்டும் பணிகள் நிறைவு பெறும் தருவாயில் இருக்கின்றன. மிக விரைவில் அந்த இரண்டு கட்டிடங்களும் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்படவிருக்கின்றன.

எனவே, சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, இன்னும் கூடுதல் கட்டிடங்கள் வேண்டும் என்கின்ற கோரிக்கை துறை அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெறின் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்தும்படி கேட்டிருக்கிறார்கள். ஓர் ஒன்றியத்திற்கு ஒரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் இருக்க வேண்டும் என்பது நியதி, அந்த வகையில், இந்த ஒன்றியத்தைப் பொறுத்தவரை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் இதுவரை இல்லாமல் இருக்கிறது. இதுசம்பந்தமாக ஏற்கெனவே ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்திருக்கிறோம். அதற்கான அனுமதி கிடைக்கப் பெறும்போது, உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, நிச்சயமாக லால்குடி ஊராட்சி ஒன்றியத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

லால்குடி அரசு மருத்துவமனையில் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற கட்டடப் பணிகள் முடிக்கப்படும் தருவாயில் இருக்கின்றன. கட்டி முடிக்கப்பட்டவுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், மன்ற உறுப்பினர் கோரியிக்கின்ற இன்னொரு கோரிக்கையை அவர் கடிதத்தின் வாயிலாகத் தெரிவிப்பாரேயோனால், இரு மருத்துவமனைகளில் இருக்கிற மருத்துவ சேவைகளை ஒன்றிணைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப காசநோய் இல்லா தமிழ்நாடு எனும் இலக்கை அடைவதற்கு முதலமைச்சர் அவர்களால் ஏற்கெனவே காசநோய் கண்டறிகிற துல்லிய கருவிகள், அதேபோல் 48 digital Xray வாகனங்கள் போன்றவை தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த டிசம்பர் 7 ஆம் தேதி தொடங்கி மார்ச் 24 ஆம் தேதிவரை தமிழ்நாட்டில் புதியதாக காசநோய் இருப்பவர்களைக் கண்டறிவதற்குரிய ஒரு Screening programme தொடங்கப்பட்டு அதில் இதுவரை 7,55,560 நபர்களிடத்தில் Screening செய்யப்பட்டு 21,758 நபர்கள் புதிதாக காசநோய் உள்ளவர்கள் கண்டறியப்பட்டிருக்கிறார்கள். இதற்காக இந்தியாவிலிருக்கிற அனைத்து மாநிலங்களிலும் காசநோய் கண்டறிவதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இருக்கிறது என்று சொல்லி, கடந்த வாரம் 24 ஆம் தேதி ஒன்றிய அமைச்சர் ஜே.பி. நட்டா அவர்களால் தமிழ்நாடு அரசுக்கு ஒரு விருது வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, காசநோயைக் கண்டறிந்து அந்த முயற்சிக்கு அவருடைய மருத்துவமனையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் .

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### சென்னையில் 2 நாட்கள் நடைபெறுகின்றது

# தமிழ்நாட்டில் 2 வது மருத்துவ சுற்றுலா மாநாடு!

## அமைச்சர் இரா. இராஜேந்திரன் தகவல்.



சென்னை, மார்ச் 28 -

தமிழகத்தில் 2 நாட்கள் மருத்துவ சுற்றுலா மாநாடு நடைபெறுகின்றது என்று அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார். இது குறித்து அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு மருத்துவ துறையில் ஒரு முன்னணி மருத்துவ சுற்றுலா மையமாக உள்ளது, அதன் உலகத்தரம் வாய்ந்த சுகாதாரம், திறமையான நிபுணர்கள் மற்றும் செலவு குறைந்த சிகிச்சைகள் மூலம் இந்தியாவின் சர்வதேச மருத்துவ சிகிச்சைக்கான 25% பேரை ஈர்க்கிறது. பங்களாதேஷ், இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமன் மற்றும் ஆப்பிரிக்காவிலிருந்து சிகிச்சைக்காக வருபவர்கள் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, இருதயவியல் மற்றும் குறைந்தபட்ச ஊடுருவும் அறுவை சிகிச்சைகள் போன்ற மேம்பட்ட நடைமுறைகளில் தமிழ்நாடு நிபுணத்துவம் பெற்ற மாநிலமான சிறந்து விளங்குகிறது. சேவைகளை நெறிப்படுத்த, சிகிச்சை வசதி, ஒழுங்குமுறை மேம்பாடுகள் மற்றும் ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சித்த மருத்துவம் போன்ற பாரம்பரிய நல்வாழ்வு சிகிச்சைகளை ஒருங்கிணைக்கும் வகையில் ஒரு மருத்துவ சுற்றுலா பிரிவு முன்மொழியப்பட்டது. 'தமிழகத்தில் ஆரோக்கியம்' மற்றும் உலகளாவிய கூட்டாண்மைகள் போன்ற முயற்சிகளுடன், மருத்துவ மதிப்பு பயணத் துறையில் தமிழ்நாடு தனது நிலையை தொடர்ந்து வலுப்படுத்துகிறது.

இந்த இரண்டு நாள் மாநாடு மற்றும் கண்காட்சியில் B2B கூட்டங்கள் நடைபெறும், உலகம் முழுவதும் மருத்துவ சுற்றுலாவை விருப்பமான தேர்வாக மையமாகக் கொண்டிருக்கும் (பாதுகாப்பு, தரம், செலவு மற்றும் மருத்துவ சிறப்பின் அடிப்படையில்). இது சுகாதார காப்பீடு, சுகாதார வசதியாளர்களின் பங்கு மற்றும் மருத்துவ மதிப்பு சுற்றுலாவை ஊக்குவிப்பதில் அரசாங்கங்களின் பங்கு ஆகியவற்றையும் உள்ளடங்கும். உலகெங்கிலும் உள்ள பங்குதாரர்களை நம்பகமான அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவமனைகள், நல்வாழ்வு மையங்கள் மற்றும் ஆயுஷ் மையங்களுடன் ஒன்றிணைக்கும். இது உலக அளவில் இந்திய சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கும், சுகாதாரத் துறையில் ஏராளமான வணிக வாய்ப்புகளைத் திறக்கும் அதே வேளையில் நாடுகளுக்கு இடையே நீடித்த கூட்டாண்மையை உருவாக்குவதற்கும் ஒரு தளத்தை வழங்குகிறது.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் மேற்கு பகுதி திமுக சார்பில் இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையிலும் எஸ்.இந்திரன் வரவேற்பிலும் டி.காமராஜ், எஸ்.சேகர், இரா.சுரேஷ், ஆ.நடராஜன், ஜி.கே.ரவி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மருத்துவர் நா.எழிலன் எம்எல்ஏ., இளம் பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ் ஆகியோர் பேசினர். உடன் மேயர் வசந்தகுமாரி, கோ.காமராஜ், பிரபுகஜேந்திரன், கோடு பிரகாஷ், வ.விஜயரங்கன், கோ.ஜானகிராமன், பி.சதாசிவம், பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி

### மார்ச் 28 (1949)



"சுயமரியாதை இயக்கத்தின் சுடர்! தன்மதிப்பு இயக்கத்தின் தனிப்பெரும் தளபதி! மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கும் தலைவன்! வைதீகத்தின் வைரி! வருணாசிரமத்தின் விரோதி! சீர்திருத்தச் செம்மல்! சொற்செல்வன்! சோர்வற்ற உழைப்பாளி! அஞ்சா நெஞ்சுடன் அறிவுப்பணி புரிந்து வந்தவர்! " என அறிஞர் அண்ணாவின் பாராட்டைப் பெற்றவர்.

முதல்முதலாக காஞ்சிபுரத்தில் இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்திய பெருமைக்குரியவர்.

'தூக்குமேடை' நாடகத்தை கலைஞர் எழுதி நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களுடன் முக்கியப் பாத்திரத்தில் நடித்து தஞ்சையில் அரங்கேற்றப்பட்ட போது நாடகத்திற்கு தலைமையேற்ற அழகிரி அவர்கள் கலைஞரின் எழுத்தாற்றலையும், நடிப்பையும் பார்த்துவிட்டு, 'கலைஞர்' என்ற பட்டத்தை தன் வாயால் உச்சரித்து வழங்கினார்.

சிம்மம் கர்ச்சித்தது, புலி உறுமியது, கோடையிடி குமுறியது, பெரியார் பேச்சில் காணப்பட்ட அழுத்தம் திருத்தமான வாதமும், அழகிரி பேச்சில் காணப்பட்ட வீரங் கொப்பளிக்கும் வரிகளும், அண்ணா பேச்சின் அழகு தமிழும் என்னை வெகுவாக கவர்ந்தன" என்று தலைவர் கலைஞர் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.